BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

An international open access, peer- reviewed, refereed journal

# மு. மேத்தா கவிதைகளில் சமுதாய சிக்கலும் தீர்வும்

# Mu. Metha kavithaikalil samuthaya sikkalum theervum

**திருமதி ரா. வசுமதி**

முனைவர்பட்ட ஆய்வாளர்(பகுதி நேரம்), முதுகலை தமிழாய்வுத்துறை, முத்துரங்கம் அரசினர் கலைக்கல்லூரி, வேலூர்.

**முனைவர் ச. சுமதி**

இணைப் பேராசிரியர், துறைத்தலைவர், முதுகலை தமிழாய்வுத்துறை, முத்துரங்கம் அரசினர்கலைக்கல்லூரி, வேலூர்.

**R. Vasumathi**

Ph. D., Research Scholar (Part Time), Postgraduate and Research, Department of Tamil, Muthurangam Govt Arts college, Vellore- 632002, Tamilnadu, vasumathiarumugam05@gmail.com , Cell: 9791324371, Orcid : https://orcid.org/0009-3643-0292

**Dr. C. Sumathi**

Head of the Department, Postgraduate and Research, Department of Tamil, Muthurangam Govt Arts College, Vellore- 632002, drcsumathi@gmail.com

**Abstract**

From the time early humans appeared, they worshipped nature. As time passed, civilization and prosperity increased. Human beings developed leadership qualities and tried to establish their individuality and superiority among others. The weapon he took in his hand for this purpose was religion. In the name of religion, he separated people belonging to him from others and established his position through it. As religions increased over time, conflicts began to arise among them. These conflicts, in the form of violence and riots, claimed many lives. The objective of this research is to move away from such attitudes and promote harmony among people.

**Keywords:** Socitey - Social Problems - Religion - Violence - Riots - People's Condition – Solutions

**ஆய்வுச் சுருக்கம்**

ஆதிமனிதன் தோன்றிய காலந்தொட்டு இயற்கையை வழிபட்டு வந்தான். காலம் செல்லச் செல்ல நாகரீகமும் வளமும் பெருக பெருக தலைமைப் பண்பை வளர்த்துக் கொண்டு தன்னை தனித்தன்மைபடுத்திக் கொள்ளவும் மற்றவர்களின் மத்தியில் தான் உயர்ந்தவன் என்பதை நிலைநிறுத்தவும் அவன் கையில் எடுத்த ஆயுதம் மதம் என்ற பெயரில் தன்னை சார்ந்தவர்களையும் பிறரையும் பிரித்து அதன் வழியாக தன்னை நிலைபடுத்திக் கொண்டான். காலப் போக்கில் மதங்கள் பெருகியதால் அவற்றிற்கிடையே மோதல்கள் ஏற்படத் தொடங்கியன. அம்மோதல்கள் வன்முறை, கலவரம் என்ற பெயரிட்டு உயிர்களை பலி வாங்கின. இந்த நிலைப்பாட்டை விடுத்து நல்லிணக்கம் பெற வேண்டும் என்பதே இவ்வாய்வின் நோக்கம்.

**குறிச் சொற்கள் :** சமுதாயமும் படைப்பாளனும் - சமூக சிக்கல்கள் - மதம் - வன்முறை - கலவரம் - மக்கள் நிலை - தீர்வுகள்.

**முன்னுரை**

இந்திய நாடு பல்வேறு சமுதாயங்களால் பின்னப்பட்ட ஓர்இறையாண்மை மிக்க அமைப்பாகும். இந்த சமுதாயத்தில் ஒவ்வொரு மனிதனும் அதன் அஸ்தமாகத் திகழ்கின்றான். பொதுநிலையில் மனித வாழ்க்கை சமுதாயத்தோடு நேரடித் தொடர்பை ஏற்படுத்துகிறது. நாளடைவில் சமுதாயங்களை நோக்கும் போது தனக்கே உரிய இயங்கியலைக் கொண்டிருப்பதை உணரலாம். இத்தகைய வாழ்வில் சாதி, மூடநம்பிக்கை, மதம், வேலையில்லாத் திண்டாட்டம், ஊழல், மது அருந்துதல் போன்றவற்றின் பங்கு இருப்பதைக் காண முடியும். இவையே சமுகத்திற்கு சிக்கல்களை உண்டாக்குகின்றன. இச்சிக்கல்களையும் அதற்கான தீர்வுகளையும் மு. மேத்தா கவிதையின் வழி எடுத்துரைப்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**சமுதாயமும் படைப்பாளனும்**

சமுதாயத்தில் நம்முடைய அன்றாட வாழ்வில் நாம் காணும் பல்வேறு அவலங்களைக் கவிஞன் கவிதைகள் மூலம் வடித்தெடுத்து நம்மை விழிப்படையச் செய்கின்றான். "சமுதாய நோக்கோடு பாடப்பட்ட கவிதைகளில் மக்களின் நிலை, அவர்களின் போக்கு, அவர்தம் பொருளாதாரம், அரசியல் போன்ற நாளும் வாழ்வோடு தொடர்புடைய கூறுகளே அதிகம்" (இல. செ. கந்தசாமி, புதுக்கவிதை ஒரு பார்வை. ப.13) என்பதை இங்கு சிந்திக்கத்தக்கது.

**மு. மேத்தா கவிதைகளில் சமூகச் சிக்கல்கள்**

நம் வாழ்வில் இயல்பாக பாதிக்கும் வகையில் பல்வேறு நிகழ்வுகள் தினந்தினம் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. "நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்த மனிதனுக்குக் காதல், வேலை வாய்ப்பு, வறுமை, வரதட்சணை, விலைவாசி, சம்பள உயர்வு என்னும் பல்வேறு விதமான பிரச்சனைகள் இருக்கின்றன. இச்சூழ்நிலைகளில் அவனுக்கு நேரும் உணர்பனுபவங்களை இன்றையப் புதுக்கவிஞர்க்ள வெளியிடுகின்றனர்" (பாலா புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை. ப.85). மு. மேத்தாவின் கவிதைகள் பற்றி சு. செல்லப்பன் அவர்கள் "மேத்தாவின் எழுதுகோலில் இருப்பது மன மயக்கம் செய்யும் மது அல்ல் மக்கள் அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர்; அந்த கண்ணீரால்தான் அவர்எழுத்துப் பூக்களை மக்களின் மனத்தாள்களில் பதிவு செய்கிறார்" (சிலம்பொலி செல்லப்பன், தோழமை உரை மு. மேத்தா கனவு குதிரைகள்).

தன்னுடைய கவிதைகளைப் பற்றி மு. மேத்தா குறிப்பிடுகையில் "கவிதை என்பது தனிமனிதனுடையது தான் என்றாலும் அதில் உள்ள வேகம் அல்லது சோகம், அந்தக் கவிதைகயில் ஏற்படுகின்ற பெரியநெருப்பு அல்லது சிறிய பனிக்கட்டி இதைக் கொடுப்பது சமூகம்" (மு. மேத்தா இதய வாசல். ப.61) என்கின்றார். "மேத்தாவின் கவிதைகளில் தனிமனித உணர்வுகள் சில சமயங்களில் வெளிப்பட்டாலும் பெரும்பாலான இடங்களில் சமூகவியல் தொடர்பான நிகழ்வுகளைப் பின்னணியாகக் கொண்டே பாடுகின்றனார்" (க. இராமச்சந்திரன் மு. மேத்தா கவிதைகளில் சமுதாயப் பார்வை. ப.80) என்ற அறிஞரின் கருத்து நோக்கத்தக்கதாகும்.

**மதம்**

மனிதனை ஒன்றுபடுத்த தோன்றியதேயன்றி பிரிக்கத் தோன்றியதல்ல, எனினும், காலங்காலமாக மதத்தின் பெயரால் வெறுப்பை வளர்த்து சண்டையிட்டு அமைதியை குலைத்து அழிவுக்கு வழிவகுத்து வருதல் வருத்தத்திற்கு உரியது. மதக்கலவரத்தால் மனிதகுலச் சீரழிவைக் கண்முன் கொண்டுவந்து கலவரங்களால் ஏற்படும் பாதிப்புகளை புதுக்கவிதைகள் எடுத்துரைக்கின்றன. அவற்றில் மு. மேத்தாவின் புதுக்கவிதைகள் மதத்தின்; பெயரால் சண்டையிட்டுக் கொள்வதால் ஏற்படும் தீய விளைவுகள் பற்றி,

*"உடலில் இரத்தம்*
*ஓட வேண்டும்; என்பதுதான்*
*இறைவன் நமக்கு இட்ட கட்டளை,*
*தெருவில் அதனை*
*ஓட விடுவது*
*தெய்வநிந்தனை"*

(மேத்தா கவிதைகளில் சமுதாய பார்வை, *ப.80)*

கூறியுள்ளார். மேலும் மதக்கலவரங்களால் வன்முறை பெருகுவதை,

*"அடிமை இந்தியாவில்*
*ஆங்கிலேயர்கள்*
*காப்பாற்றி வைத்திருந்த*
*காந்தியை*
*சுதந்திர இந்தியா*
*சுட்டுக் கொன்றதே*
*என்ன காரணம்*
*மதவெறி என்னும்*
*புதுவெறி அல்லவா?"*

*(கனவுக் குதிரைகள், பக்.17)*

எனும் வரிகள் தேசத்தந்தையின் அகால மரணத்திற்கு மதவெறியே வழிவகுத்தது என்று குறிப்பிடுகின்றனார்.

**வன்முறைகள்**

மதங்களின் பெயரால் வன்முறைகள் அக்காலத்தில் ததலைவிரித்தாடியதையும் பல்வேறு இடங்களில் அவை பல்கிப் பெருகியிருப்பதையும் மு. மேத்தா அவர்கள் வெளிப்படுத்தியதை,

*"சலீமும் சங்கரும்*
*சகோதர்கள் நேற்றுவரை*
*ஒருவரை ஒருவர்*
*தேடிக் கொண்டிருந்தனர்…*
*உரையாடி மகிழ்வதற்கு!*
*ஒருநாள் யாரோ*
*உரையாற்றினார்கள்*
*இங்கு… இப்போது*
*சலீமும் சங்கரும்*
*ஒருவரை ஒருவர்*
*தேடிக் கொண்டிருக்கின்றார்கள்…*
*உயிர்ப்பலி கேட்பதற்கு"*

*(கனவுக் குதிரைகள், பக்.17)*

என்ற வரிகள் அண்மை காலத்தில் மதங்களினால் உண்டாகும் வன்முறையை மனக்கலக்கத்துடன் பதிவிட்டுள்ளார். மேலும், மதங்களின் பெயரால் தனிமனிதனுக்கு ஏற்படும் இன்னலால் இருப்பதற்குகூட இடமின்றி அதனைத் தேடும் நிலை ஏற்பட்டுள்ளதை,

*"இந்தியனே! இந்தியனே!*
*முதலில் நீ இருக்க*
*ஒரு*
*இடம் தேடு*
*ஆண்டவனுக்கு*
*வேண்டிய*
*இடத்தை*
*அவன் தேடிக் கொள்வான்"*

*(கனவுக் குதிரைகள், பக்.18)*

**மக்களின் நிலை**

மதவெறி தலைத்தூக்கும் சமுதாயத்தில் அதன் அங்கமாக உள்ள மக்கள் தங்களின் தனித்துவமான தனிமனித சுதந்திரமும் உரிமையும் பாதிப்படைவதை,

*"எவனது விருப்பப்படியும்*
*எவனுக்கும் உரிமையில்லை*
*மதவெறி வாளால்*
*மற்றவர்களைக் கொல்வதற்கு"*

*(கனவுக் குதிரைகள், பக்.19)*

**தீர்வுகள்**

சமுதாயத்தில் பிரச்சனைகளும் சிக்கல்களும் இருப்பது சாத்தியமே என்றாலும் அதற்கான தீர்வுகளும் நிச்சயம் உண்டு. அத்தீர்வுகளை கூறுவது கவிஞர்களிடம் மேலோங்கியுள்ளது. அந்த வகையில் மு. மேத்தா அவர்கள் சளைத்தவரல்லர். மதங்களின் பெயரால் கலவரமும் வன்முறையும் செய்யும் செயலை விடுத்து நல்வழி அடைய செயல்பாடுகளை மேற்கொள்ளுங்கள் என்பதை,

*"இந்து வே திரண்டு வா!*
*என்றோ*
*கிருத்துவனே கிளம்பி வா!*
*என்றோ*
*இஸ்லாமியனே எழுந்து வா!*
*என்றோ*
*எழுப்பாதீர்முழக்கம்*
*மனிதனே இணைந்து வா*
*என்று முழங்கி*
*மானுடத்தை இனியேனும்*
*மகத்துவப்படுத்துங்கள்"*

*(கனவுக் குதிரைகள், பக்.20)*

மதங்களின் பெயரைச் சொல்லி மனிதனை பிளவுபடுத்துவதை நிறுத்தி அவர்களின் ஒற்றுமைக்காக எழுதியுள்ளார்.

மேலும், சாதிக் கலவரத்தைத் தூண்டி விடுவோரின் செயல்பாடுகள் பற்றியும், அவர்களால் ஏற்படும் பாதிப்பையும்,

*"தீபங்களே*
*நீங்கள்*
*தெரிந்துகொள்ளுங்கள்*
*திரிகள் மட்டுமே*
*கருகிக் கொண்டிருக்கின்றன…*
*தூண்டுகோல்கள்*
*சுகமாகத்*
*தூங்குகின்றன"(கனவுக் குதிரைகள், பக்.21)*

கூறியவர், தூண்டுகோல்களின் செயல்பாடுகள் திரிகளைக் கருகிக் கொண்டிருக்கின்றன என்பதை மதத்தை தூண்டிவிடுவோரின் செயல்பாடுகளால் செயல்படுபவரின் நிலைபாடுகளை விளக்கிச் செல்கின்றார். ஆகையால், வன்முறை செயல்பாடுகளைத் தவிர்த்து வாழ்க்கையை வளப்படுத்தும் முயற்சியை செய்யுங்கள் என்று குறிப்பிடுகின்றார்.

**மத நல்லிணக்கம்**

உலகப் போர்களைக் காட்டிலும் மதக்கலவரத்தில் மனித குருதி ஆறாகப் பெருக்கெடுத்து செல்வதற்கு காரணம் மதங்களிடையே நல்லிணக்கம் இன்மையே மனிதனாக பிறந்த ஒவ்வொருவரும் நல்லிணக்கத்துடன் வாழ்தல் நன்று. இதனை,

*"மதத்தைச் சொல்கிறாய்!*
*சாதியைச் சொல்கிறாய்!*
*எப்போது*
*மனிதன் என்று நீ*
*சொல்லப் போகிறாய்?"*

*(அவர்கள் வருகிறார்கள், ப.36)*

என்று கூறி மதங்களை இணைத்து மனிதனாக வாழ்க என்று கூறி செல்கிறார்.

**முடிவுரை**

சமூகத்தில் மனிதனின் வாழ்க்கைச் சூழல் பலவகைகளிலும் வேறுபட்டு இருக்கின்றன. அவ்வகை வாழ்க்கை பல்வேறு எதிர்பார்ப்புகளை உள்ளடக்கியதாக உள்ளது. அதனால் சமூகச் சிக்கல்களும் ஏற்படுகின்றன. அச்சிக்கல்களில் மிகவும் இன்றியமையாததுமான மதங்கள் எனலாம். அவை மனித இனங்களை நன்றுபடுத்த தோன்றியதேயன்றி பிரித்துப் பார்ப்பதற்காக தோன்றியது அன்று. மதங்களின் பெயரால் சாதிய உணர்வு மேலோங்குகிறது அதனால் வன்முறையும் கலவரமும் வெடிக்கின்றன. மனிதனை பாதுகாக்க வேண்டிய இறை கொள்கையின் மதங்களின் பெயரால் மத வாதிகள் இத்தகு செயல்களில் ஈடுபட்டு மக்களைத் பிரிக்கும் முயற்சியில் செல்கின்றனர். அதனை மக்கள் தவிர்த்து வன்முறை, கலவரங்களை விடுத்து நல்லிணக்கத்தை பின்பற்ற வேண்டும் என்று கவிதை வாயிலாக கூறிச் செல்கின்றார் கவிஞர் மு. மேத்தா.

**துணை நின்ற நூல்கள்**


1. இராமசந்திரன், க., மு. மேத்தா கவிதைகளில் சமுதாய பார்வை, நர்மதா பதிப்பகம், சென்னை, பதிப்பு 1987
2. கந்தசாமி, இல. செ., புதுக்கவிதை ஒரு பார்வை, தன்னம்பிக்கை மாத இதழ், பதிப்பு 2008.
3. பாலா. புதுக்கவிதை ஒரு புதிய பார்வை, அகரம் பதிப்பகம், சிவகங்கை, பதிப்பு 1983.
4. மேத்தா, மு., அவர்கள் வருகிறார்கள், கவிதா பப்ளிகேஷன், சென்னை, பதிப்பு 1998.
5. மேத்தா, மு., கனவுக்குதிரை, கவிதா பப்ளிகேஷன், சென்னை, பதிப்பு 1998.